# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**TAMILNADUTEACHERSEDUCATIONUNIVERSITY**

(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in
Website: www.tnteu.ac.in


No.TNTEU/R/DR-II/Circular/2023/702 நாள்: 05.09.2023

**முனைவர். பி.சி.நாகசுப்பிரமணி, பி.எச்.டி,**
**பதிவாளர் (பொ)**

**WEB POST**

பெறுநர்

முதல்வர்கள்/நிர்வாகிகள்
அனைத்து இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - பி.எட். இரண்டாமாண்டு - 2023-24 கல்வியாண்டு மூன்றாம் பருவத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு – கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு செல்வதற்கு உரிய பள்ளிகளை தமிழக அரசின் உயர்கல்வி/பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஒதுக்கப்பட்டுள்ளது - பள்ளிகளின் விவரங்களை சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு அனுப்புதல் - சார்பு.

**பார்வை:** முதன்மை செயலர், உயர்க்கல்வித்துறை கடித நாள்: 05.09.2023.

*****

மேற்காண் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் 2023–24 ஆம் கல்வியாண்டில், மூன்றாம் பருவத்தில் பயிலும் பி.எட். இரண்டாம் ஆண்டு மாணாக்கர்கள் பல்கலைக்கழக பாடத்திட்டத்தின் படி, அரசு/அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் வருகின்ற 2023, **செப்டம்பர் 08-ம்** தேதி முதல் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அதன் அடிப்படையில், மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, மாணாக்கர்கள் எந்த பள்ளியில் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்ற பள்ளிகளின் பட்டியல், இந்த கல்வியாண்டில் (2023-24), தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையின் வாயிலாக நிர்ணயித்து, பல்கலைக்கழகத்திற்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்டுள்ளது. அப்பள்ளிகளின் பட்டியல் தங்கள் கல்லூரிக்கு இத்துடன் இணைத்து கல்லூரியின் College Login வாயிலாக அனுப்பப்படுகிறது.

எனவே, கல்லூரி முதல்வர்கள் கீழ்க்குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கற்றல், கற்பித்தல் பயிற்சியினை சிறந்த முறையில் முடித்திட தங்களது சீரிய ஒத்துழைப்பினை நல்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.5645/அ5/2023 நாள். .09.2023

பொருள்: பயிற்சி - கற்பித்தல் பயிற்சி - பாண்டூர், இந்திரா கல்வியியல் கல்லூரியில் 2023-2024 ஆம் கல்வியாண்டில் பயிலும் எம்.எட்., (M.Ed) இரண்டாம் ஆண்டு 50 ஆசிரிய மாணவர்கள் - அரசு உயர்/மேல்நிலைப் பள்ளியில் நேரடியாக கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: பாண்டூர், இந்திர கல்வியியல் கல்லூரி தாளாளரின் கடித நாள்.05.09.2023

-----

பார்வையில் காணும் கடிதத்தில் திருவள்ளூர் மாவட்டம், பாண்டூர், இந்திரா கல்வியியல் கல்லூரியில் 2023-2024-ஆம் கல்வியாண்டில் எம்.எட்., (M.Ed) இரண்டாம் ஆண்டு 50 ஆசிரிய மாணவர்கள் அரசு உயர்/மேல்நிலைப் பள்ளியில் நேரடியாக கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள 11.09.2023 முதல் 15.09.2023 வரை அனுமதி 07 வேலை நாட்கள்(ஒரு வாரம்) அனுமதி வழங்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கல்வியியல் கல்லூரியில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பள்ளி வேலை நாள்களில் நேரடியாக கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. சார்ந்த பள்ளியில் மாணவர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. ஆசிரிய மாணவர்கள் கற்பித்தல் பயிற்சி சார்ந்து எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் பள்ளி நாட்களில் செயல்பட வேண்டும்.
3. ஆசிரிய மாணவர்கள் பயிற்சியின்போது பள்ளிக்கு கட்டாயம் வருகை புரிய வேண்டும்.
4. ஆசிரிய மாணவர்கள் பயிற்சியின் போது அரசின் உடமைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் செயல்பட வேண்டும்.
5. ஆசிரிய மாணவர்கள் பயிற்சியின் போது பள்ளிக்கு எவ்வித களங்கமும் ஏற்படாமல் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும்.
6. ஆசிரிய மாணவர்கள் வருகைப்பதிவேடு கண்டிப்பாக பள்ளியில் பேணப்பட வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்
திருவள்ளூர்

பெறுநர்

தாளாளர், பாண்டூர், இந்திரா கல்வியியல் கல்லூரி, திருவள்ளூர்.

நகல்:

1. அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், திருவள்ளூர், பொன்னேரி.